
ஆலன் ஜே மற்றும் நிலத்தடி இரயில் பாதை



மார்லீன் டார்க பிரில்

படம்: ஜானிஸ் லீ போர்ட்டர்

ஆலன் ஜே மற்றும் நிலத்தடி இரயில் பாதை

மார்லீன் டார்க பிரில்

படம்: ஜானிஸ் லீ போர்ட்டர்

தமிழில் : ஆர். ஆர்வின்



ஆசிரியரின் குறிப்பு

1840-களில் ஆலன் ஜே மற்றும் அவரது குடும்பத்தினர் ஓஹியோவின் ராண்டோல்ஃப் நகரில் வசித்து வந்தனர். ஜே குடும்பத்தினர், 'நண்பர்கள் சங்கம்' அல்லது 'குவாக்கர்கள்' எனப்படும் ஒரு மதக் குழுவைச் சேர்ந்தவர்களாக இருந்தனர். அந்த நண்பர்கள் அனைவரும் சமம் என்று நம்பியிருந்தனர். எனவே, அவர்கள் அனைவரும் ஒரே மாதிரியான எளிமையான ஆடைகளை அணிந்தனர், மேலும் அறிமுகமில்லாதவர்கள், நண்பர்கள் என அனைவரையும் ‘தீ' என்றே அழைத்தனர்.

வருந்தத்தக்க வகையில், அமெரிக்காவின் தென்பகுதியில் வாழ்ந்த பெரும்பாலான ஆப்பிரிக்க அமெரிக்கர்கள் சமமாக நடத்தப்படவில்லை. அவர்கள் அடிமைகள். அடிமைகள் நாள் முழுவதும் ஊதியமின்றி வேலை செய்தனர். அவர்களின் எஜமானர்கள் அவர்களை விலங்குகளைப் போல நடத்தினார்கள். அடிமைகள் தப்பி ஓடும்போதெல்லாம், பிடிக்கப்பட்டு தண்டிக்கப்பட்டனர். அவர்கள் அடிக்கடி சித்திரவதை செய்யப்பட்டனர் அல்லது கொல்லப்பட்டனர். அடிமைகள் தப்பிச் செல்ல உதவியவர்களும் தண்டிக்கப்பட்டனர்.

ஆலனின் பெற்றோர்களான ஐசக் மற்றும் ரோடா ஜே, அந்த வேலை மிகவும் ஆபத்தானதாக இருந்தபோதிலும், அடிமைகள் தப்பிச் செல்ல உதவினார்கள். அவர்கள் ‘நிலத்தடி இரயில்பாதை' என்றழைக்கப்பட்ட ஒரு இரகசியக் குழுவின் உறுப்பினர்களாக இருந்தனர்.

நிலத்தடி இரயில் பாதை அமைப்பில் பணியாற்றியவர்கள், தப்பியோடிய அடிமைகளைத் தங்கள் கொட்டகைகள், மாடிப்பகுதிகள் மற்றும் மறைவான அறைகளில் ஒளித்து வைத்தனர். அவர்கள் தப்பியோடியவர்களை ஒரு பாதுகாப்பான இடத்திலிருந்து அடுத்த பாதுகாப்பான இடத்திற்கு வழிநடத்தினர். தப்பியோடியவர்கள் கால்நடையாகவோ, வண்டியிலோ அல்லது குதிரை மீதோ பயணம் செய்து, கனடாவை நோக்கிச் செல்லும் ரகசியப் பாதைகளைப் பின்பற்றி சென்றனர். அங்கே, சட்டத்தின் முன் அனைவரும் சமமாக நடத்தப்பட்டனர்.

ஜே குடும்பத்தினர் தாங்கள் செய்து கொண்டிருந்த உதவியைப் பற்றி மற்றவர்களிடம் கூறாமல் மிகவும் கவனமாக இருந்தனர் — தங்கள் குழந்தைகளிடம் கூட அதைச் சொல்லவில்லை. பதினொரு வயதான ஆலனுக்கு, அவனுடைய பெற்றோர் மர்மமாக த்தோன்றி பின்னர் மறைந்து போகும் கறுத்த அந்நியர்களுக்கு உணவு அளித்து, அவர்களை மறைத்து வைப்பது தெரியும். ஆனால், ஒரு நாள் தப்பியோடிய ஓர் அடிமையை நேருக்கு நேர் சந்திக்கும் வரை, அடிமைத்தனம் என்றால் என்ன என்பதைப் பற்றி ஆலனுக்கு அதிகம் புரிதல் இல்லை.



ஜூலை 1, 1842

ஆலன் துணி உலர்த்தும் கம்பியில் கடைசி சட்டையையும் தொங்கவிட்டான்.

அவனுடைய தாய் மிகவும் உடல்நலமின்றி இருந்ததால், இவ்வளவு கடினமான வேலையைச் செய்ய முடியவில்லை.

அதனால், அந்தப் பொறுப்பு அவளுடைய மூத்த குழந்தையான ஆலனிடம் வந்தது.

ஒவ்வொரு திங்கட்கிழமையும் ஆலன் துணிகளைத் துவைத்து, கொதிக்க வைத்து, கஞ்சி போட்டு, பின்னர் கம்பியில் காயப்போடுவான்.

அதற்குப் பிறகு அவன் விளையாடுவதற்கு விடுதலை கிடைத்தது.

அன்று பிற்பகல்

ஆலன் தனது மீன்பிடிக்கம்பியை எடுத்துக்கொள்வதற்காக தொழுவத்தை நோக்கிச் சென்றான்.

அவன் முன்புற முற்றத்தைக் கடந்து செல்லும்போது, ஜே குடும்பப் பண்ணையை நோக்கி ஒரு குதிரை சாலையில் வேகமாக ஓடிச் செல்வதை அவன் கண்டான்.

சில நொடிகளுக்குள், குடும்ப மருத்துவர் முன்வாயிலில் வந்து நின்றார்.



நண்பா ஜே! நண்பா ஜே! என்று மருத்துவர் கூவினார்.

ஆலனின் தந்தை தொழுவத்திலிருந்து வெளியே வந்து, வாயிலை நோக்கி வேகமாக நடந்து வந்தார்.


“இன்று உங்கள் குதிரைக்கு சிறகுகள் முளைத்துவிட்டன போலிருக்கிறது,” என்று ஐசக் ஜே கூறினார்.

“மேலும் நீங்கள் மிகவும் அவசரமாக செல்வது போல் தெரிகிறது” என்று கூறினார்.



மருத்துவர் ஐசக்கை நோக்கி குனிந்து,

“ஒரு தப்பியோடிய அடிமை காட்டுக்குள் ஒளிந்திருக்கிறான்” என்று தாழ்ந்த குரலில் கூறினார்.



“அந்த அடிமையின் உரிமையாளரும் அவனுடைய ஆட்களும் மிக அருகிலேயே பின்தொடர்ந்து வந்து கொண்டிருக்கிறார்கள். அவர்களிடம் துப்பாக்கிகளும் இருக்கின்றன” என்று அவர் எச்சரித்தார்.

மருத்துவர் ஐசக்கின் தோளைப் பற்றிக்கொண்டு, “கவனமாக இரு என் நண்பா" என்று கூறினார்.

ஆலனின் தந்தை தலையசைத்தார்.

மருத்துவர் தனது குதிரையைத் திருப்பிக்கொண்டு அங்கிருந்து சென்றார்.

ஆலன் தனது தந்தைக்கு அருகில் சென்று,அவரது கவலை நிறைந்த முகத்தைப் பார்த்தான்.

ஆலன் யோசித்தான்:

அந்த அடிமையின் உரிமையாளர் வந்து என் தந்தையைச் சுட்டுக் கொல்வாரா?

தப்பியோடிய அடிமைகளுக்கு உதவிய மற்ற நண்பர்கள் பற்றிய கதைகள் அவனுக்கு நினைவுக்கு வந்தன.

சில நண்பர்கள் அடி வாங்கியிருந்தனர்.

மற்ற சில நண்பர்களின் வீடுகள் தீ வைத்து எரிக்கப்பட்டிருந்தன.



ஐசக் ஜே தனது மகனைப் பார்த்தார்.

“ஆலன்,” என்று அவனுடைய தந்தை கூறினார்.

“விரைவில் கருமை நிறமுள்ள ஒரு மனிதனை நீ பார்க்கக்கூடும். அவனைப் பெரிய வால்நட் மரத்திற்குப் பின்னால் இருக்கும் சோள வயலுக்குள் அழைத்துச் செல். அங்கே சோளப்பயிர் அவனை மறைப்பதற்குப் போதுமான உயரத்தில் உள்ளது. ஆனால் நீ இதைச் செய்தால், இதைப் பற்றி என்னிடமோ வேறு யாரிடமோ சொல்லக்கூடாது.”

பின்னர் ஐசக் ஜே திரும்பி, கொட்டகையை நோக்கி நடந்துசென்றார்.

ஆலனால் அசைய முடியவில்லை.

“இப்போது நான் என்ன செய்ய வேண்டும்?” என்று அவன் எண்ணினான்.

காட்டிலிருந்து கேட்ட சரசரக்கும் சத்தம் ஆலனின் சிந்தனையைத் தடுத்தது.

மரங்களுக்கும் புதர்களுக்கும் இடையே யாரோ நகர்வதை அவன் கண்டான்.

ஆலன் சத்தமில்லாமல் அந்த ஒலியை நோக்கி நடந்தான்.

சரசரக்கும் சத்தம் திடீரென்று நின்றுவிட்டது.



திடீரென்று துப்பாக்கியுடன் ஒரு மனிதன் புதர்களிலிருந்து தாவி வெளியே வந்தான்.

ஆலன் திடுக்கிட்டு பின்னால் நகர்ந்தான்.

இருவரும் எதுவும் பேசாமல் ஒருவரையொருவர் பார்த்துக்கொண்டனர்.

அந்த மனிதன் கிழிந்த ஆடைகளை அணிந்திருந்தான்.

அவனுடைய கால்களில் இரத்தம் வழிந்துகொண்டிருந்தது.

அவனுடைய கருமையான தோலில் வெட்டுக்காயங்களும், சாட்டையால் அடிக்கப்பட்ட தழும்புகளும் இருந்தன.

“நீங்க மாஸ்டர் ஜே-யோட பையனா?” என்று அந்த மனிதன் கேட்டான்.


அவனுடைய கண்கள் அங்குமிங்கும் வேகமாக அலைந்தன.

சாலையையும் வீட்டையும் கவனித்துக்கொண்டிருந்தான்.

“ஆமாம்,” என்று ஆலன் தடுமாறியபடி சொன்னான்.

“நான் ஆலன். அவருடைய மகன்.”

அந்த மனிதன் தன் துப்பாக்கியைத் தாழ்த்தினான்.







ஆலன் பேசுவதற்குத் தன் தைரியத்தைத் திரட்டிக்கொண்டான்.

எப்போதுமே அவனால் வார்த்தைகளைத் தெளிவாகச் சொல்ல முடியாது. பேசுவதில் அவனுக்குச் சிரமம் இருந்தது.

ஆனால் இப்போது, அவன் சொல்வதைப் புரிந்துகொள்வது முன்பைவிட மிகவும் முக்கியமாக இருந்தது.

“என்னைப் பின்தொடருங்கள்,” என்று ஆலன் மெதுவாகச் சொன்னான்.“உங்களை ஒரு மறைவான இடத்துக்கு அழைத்துச் செல்லும்படி அப்பா என்னிடம் சொன்னார்.”

" எனக்குப் புரிகிறது ," என்றார் அந்த மனிதர்.

ஆலன் அவனை வயலின் பின்புறம், காட்டின் விளிம்பையொட்டி அழைத்துச் சென்றான்.

அவர்கள் சோள வயலுக்குள் ஆழமாக சென்றபோது, குனிந்தபடியே சென்றனர்.

ஆலன் அந்த மனிதனை வால்நட் மரத்தின் கீழிருந்த ஒரு திறந்த இடத்துக்கு அழைத்துச் சென்றான்.

“நீங்கள் அமைதியாகவும், யாருடைய கண்ணிலும் படாமலும் இருக்க வேண்டும்,” என்று ஆலன் கிசுகிசுத்தான்.

“சரியான நேரத்தில் யாராவது உங்களைத் தேடி வருவார்கள்.”

“தயவுசெய்து என் மீது கருணை காட்டுங்கள் ,” என்று அந்த மனிதன் மன்றாடினான்.

என் பெயர் ஹென்றி ஜேம்ஸ். இரண்டு நாட்களுக்கு முன்பு நான் ஓடிவந்தேன்.

அதற்குப் பிறகு எனக்கு சாப்பிடவோ குடிக்கவோ எதுவும் கிடைக்கவில்லை.”

அவனுடைய கண்கள் சோகமாகவும் சோர்வாகவும் காணப்பட்டன.

வெயிலின் தாக்கத்தால் அவனுடைய உதடுகள் வெடித்திருந்தன.



“நான் சீக்கிரம் திரும்பி வந்து உங்களுக்கு உணவு தருகிறேன்,” என்று ஆலன் அவனிடம் கூறினான்.

யாரும் ஹென்றி ஜேம்ஸைப் பார்க்கவில்லை என்பதை உறுதிசெய்ய, அந்தச் சிறுவன் சுற்றிலும் பார்த்தான்.

அவன் ஒரு சோளத்தண்டை முறித்துக்கொண்டு, நடந்தபடியே பின்னால் இருந்த மண்ணைக் கிளறினான்.

தன்னுடைய காலடித் தடங்கள் எதுவும் தெரியாமல் இருப்பதற்காக அப்படிச் செய்தான். பிறகு, சோளத்தண்டுகள் அனைத்தும் முன்பிருந்தபடியே இருக்கின்றனவா என்பதையும் சரிபார்த்துக் கொண்டான்.

பின்னர் ஆலன் காட்டின் வழியாக வீட்டை நோக்கி ஓடினான்.

அந்த அடிமையின் உரிமையாளர் இன்னும் பல மணி நேரத் தொலைவில் இருக்க வேண்டும் என்று அவன் நம்பினான்.

இந்தத் தப்பியோடிய அடிமையைப் பாதுகாப்பாகத் தப்பிக்கச் செய்வதற்கான திட்டத்தைத் தயாரிக்க அவனுடைய தந்தைக்கு நேரம் தேவைப்படும்.

தொழுவத்தை நெருங்கியபோது ஆலன் தன் நடையின் வேகத்தைக் குறைத்தான்.

“யாராவது என்னைக் கவனித்துக்கொண்டிருக்கலாம்,” என்று அவன் நினைத்தான்.

ஆலன் சமையலறைக் கதவைத் திறந்தான்.

மில்டன், வால்டர், அபிஜா மற்றும் மேரி ஆகியோர் மேசையைச் சுற்றி அமர்ந்து பட்டாணியை உரித்துக்கொண்டிருந்தனர்.

அவனுடைய அம்மா தன் ஆடும்நாற்காலியிலிருந்து எழுந்தாள்."உட்கார், ஆலன்," என்று அவள் அமைதியான குரலில் கட்டளையிட்டாள்.

"உனக்காக என்னிடம் ஒன்று இருக்கிறது."

"ஆனால், அம்மா..." என்று ஆலன் எதிர்த்தான்.

"சத்தம் போடாதே, மகனே," என்றாள் அவள்.

ஆலன் வால்டருக்கு அருகில் இருந்த பெஞ்சில் மெதுவாக அமர்ந்தான்.

"மேரி, தயவுசெய்து கொஞ்சம் சோள ரொட்டியும் பன்றி இறைச்சியும் ஒரு கூடையில் போடு," என்று ரோடா ஜே சொன்னாள்.

இவ்வளவு விசித்திரமான நேரத்தில் எப்படி தன் அம்மாவுக்கு உணவு தயாரிக்க வேண்டும் என்று தெரிந்தது என்று ஆலன் ஆச்சரியப்பட்டான்.

மேலும், அவனுடைய சகோதரர்களும் சகோதரியும் ஏன் அனைவரும் வீட்டுக்குள் இருந்தார்கள்?

"சோள ரொட்டி யாருக்காக?" என்று சிறிய மில்டன் கேட்டான்.

"நம் இல்லத்தின் வழியாகக் கடந்து செல்லக்கூடிய ஏதாவது ஒரு நண்பருக்காக," என்று அவனுடைய அம்மா புன்னகைத்தபடி பதிலளித்தாள்.





ரோடா ஜே உணவு நிரம்பிய கூடையை ஆலனிடம் கொடுத்தாள்.

“பசியுடன் இருப்பதாக நீ நினைக்கும் யாருக்காவது இந்தக் கூடையை எடுத்துச் செல்,” என்று அவள் சொன்னாள்.

ஆலன் கூடையை எடுத்துக்கொண்டு, ஒரு ஜாடி பாலும் எடுத்துக் கொண்டான்.

பின்னர் அவன் சோள வயலை நோக்கி அவசரமாகத் திரும்பிச் சென்றான்.

வால்நட் மரத்தை நெருங்கியபோது, சோளத்தண்டுகள் முறியும் சத்தத்தை ஆலன் கேட்டான்.

கருமையான துப்பாக்கிக் குழல் சோளச் செடிகளுக்கு இடையே தெரிந்தது.

ஆலன் அப்படியே உறைந்து நின்றான்.

கிளிக்!

அந்தத் துப்பாக்கி சுடுவதற்குத் தயாராகிவிட்டது என்பதை அவன் அறிந்து கொண்டான்.



“தயவுசெய்து சுடாதீர்கள்,” என்று அந்தச் சிறுவன் கெஞ்சினான்.

ஹென்றி துப்பாக்கியைக் கீழே இறக்கி, சோளச் செடிகளை விலக்கினான்.

“நீ என்னை ரொம்பவும் பயமுறுத்திவிட்டாய்,” என்று ஹென்றி நடுங்கிய குரலில் சொன்னான்.

ஆலன் ஆழமாகப் பெருமூச்சுவிட்டு, அவனுக்கு அருகில் சென்றான்.


“உங்களுக்கு வேண்டியதை எடுத்துக்கொள்ளுங்கள்,” என்று ஆலன் தான் கொண்டு வந்தவற்றை அவனிடம் காட்டியபடி சொன்னான்.

ஹென்றி கூஜாவை எடுத்தான்.

அவன் நீண்ட நேரம், திருப்தியாகப் பால் குடித்தான்.

“இது ரொம்ப நல்லா இருக்கு, மாஸ்டர் ஆலன்,” என்று ஹென்றி ஜேம்ஸ் நன்றியுடன் கூறினான்.

“என் அப்பா உங்களை அழைத்துச் செல்ல வரும் வரை இங்கே ஓய்வெடுத்துக்கொள்ளுங்கள். நான் இப்போது போக வேண்டும்,” என்று ஆலன் சொன்னான்.



ஆலன் சோளச் செடிகளை விலக்கிக்கொண்டு வயலின் விளிம்பை நோக்கிச் சென்றான்.


அவன் காட்டை விட்டு வெளியே வந்தபோது, சில குரல்கள் கேட்டன.

எவரும் தன்னைப் பார்ப்பதற்கு முன்பு, அவன் விறகுக் குவியலுக்குப் பின்னால் குனிந்து மறைந்துகொண்டான்.

ஆலன் விறகுக் கட்டைகளுக்கு இடையே எட்டிப் பார்த்தான். அங்கே அவனுடைய தந்தை குதிரைகளில் அமர்ந்திருந்த ஆறு பேரை எதிர்கொண்டு நின்றுகொண்டிருந்தார்

.அந்த அந்நியர்களிடம் துப்பாக்கிகள் இருந்தன.





ஒரு மனிதன் ஆலனின் தந்தையிடம் கடுமையான குரலில் கேட்டான்:

“என் தப்பியோடிய அடிமையை நீ பார்க்கவே இல்லை என்று உறுதியாகச் சொல்கிறாயா?”

ஐசக் ஜே தலையசைத்து பதில் கூறினார்.

“நான் ஏற்கனவே ஒருமுறை சொன்னேன். நான் ஒருபோதும் பொய் பேசுவதில்லை.”

அந்த அடிமையின் உரிமையாளர் நம்பிக்கையில்லாமல் கேலியாகச் சத்தமிட்டான்.

“அப்படியானால், உன் வீட்டை நாங்கள் சோதனை செய்து பார்க்கலாமா?” என்று அவன் கத்தினான்.


“நீங்கள் தாராளமாகச் சோதனை செய்யலாம்,” என்று ஐசக் ஜே அமைதியாகக் கூறினார்.

“ஆனால் அதற்கான முறையான ஆவணங்கள் உங்களிடம் இருக்க வேண்டும்.”

“அதற்கு கொஞ்சம் நேரம் ஆகலாம்,” என்று அந்த உரிமையாளர் கூறினான்.

“காலைக்குள் நாங்கள் திரும்பி வருவோம் என்று எதிர்பார்த்துக்கொள்.”

பின்னர் அவன் தன் ஆட்களிடம் முணுமுணுத்தபடி ஏதோ சொன்னான். அவர்கள் அவசரமாகக் குதிரைகளில் ஏறி அங்கிருந்து புறப்பட்டுச் சென்றனர்.



அன்று பிற்பகல், தப்பியோடிய அடிமையைப் பற்றியோ, கோபமாக வந்த அந்த மனிதர்களைப் பற்றியோ ஆலனுக்கு மேற்கொண்டு எதுவும் தெரியவில்லை.

அதைப் பற்றி கேட்கவும் அவனுக்குத் துணிவில்லை.

இரவு உணவுக்காக ஐசக் ஜே வீட்டுக்குள் வந்தபோது, அவர் அதிகமாக எதுவும் பேசவில்லை.

அன்றிரவு ஆலனின் அம்மா சிறிய குழந்தைகளை வழக்கத்தைவிட சீக்கிரமாகப் படுக்கைக்கு அனுப்பினாள்.

ஆலனின் அப்பா தொழுவத்திற்குச் சென்றார். சிறிது நேரத்திற்குப் பிறகு, அவர் கதவருகே வந்து ஆலனை வெளியே அழைத்தார்.

அவர்களுடைய குதிரையான வயதான ஜாக், வண்டியில் பூட்டப்பட்ட நிலையில் முற்றத்தில் நின்றுகொண்டிருந்தது.

"உன் தாத்தா வீட்டுக்குப்போக உனக்கு விருப்பமா?" என்று ஐசக் ஜே தன் மகனிடம் கேட்டார்.

"உங்களுடனா?" என்று குழப்பத்துடன் ஆலன் கேட்டான்.

"இல்லை. இந்த முறை நீ மட்டும் செல்ல வேண்டும்," என்று அவனுடைய அப்பா பதிலளித்தார்.

இருட்டில் காட்டின் வழியாக ஆலன் இதுவரை தனியாகப் பயணம் செய்ததே இல்லை.

அங்கே கரடிகளும், காட்டுப் பூனைகளும், பாம்புகளும் இருந்தன.

இப்போது அடிமைகளைத் தேடும் ஆட்களும் அங்கே இருக்கக்கூடும்.

ஆனால், தன் அப்பா என்ன செய்யச் சொல்கிறார் என்பதை ஆலன் புரிந்துகொண்டிருந்தான்.




ஆலனின் அம்மா வெளியே வந்து, தன் கணவரின் கையை இறுகப் பற்றிக்கொண்டாள்.

“நீங்கள் அவனை அனுப்பக்கூடாது, இது மிகவும் ஆபத்தானது.” என்று அவள் சொன்னாள்.


“ஆனால் நான் போகத்தான் வேண்டும், அம்மா. அந்த உரிமையாளரும் அவனுடைய ஆட்களும் இன்றிரவு திரும்பி வந்தால், அப்பா இங்கே இருக்க வேண்டும்.” என்று ஆலன் சொன்னான்.

“



“உன்னை நினைத்து நான் பெருமைப்படுகிறேன், மகனே,” என்று ஐசக் ஜே கூறினார்.

“உன்னுடன் செல்ல வேண்டிய யாராவது இருக்கிறார்கள் என்று உனக்குத் தெரிந்தால், அவரையும் அழைத்துக்கொண்டு செல்வது நல்லது.”





ரோடா ஜே தன் மகனை நீண்ட நேரம் கட்டித் தழுவிக் கொண்டாள்.

ஆலன் வண்டியில் ஏறி, கடிவாளத்தைப் பிடித்துக்கொண்டான்.


“சீக்கிரமாகச் செல். முக்கிய சாலையிலேயே இரு” என்று எச்சரித்த அவனது அப்பா “உன் தாத்தா வீட்டில் இரவு தங்கிக்கொள்ளலாம்.” என்றும் கூறினார்.

ஆலன் வயதான ஜாக்கை சோள வயலை நோக்கி வழிநடத்தினான்.

வால்நட் மரத்திற்கு அருகில், வயலின் ஓரத்தில் வண்டியை நிறுத்தினான்.

“இது ஆலன், நாம் அவசரமாகச் செல்ல வேண்டும்.” என்று அவன் மெதுவாக கூறினான்.

ஹென்றி ஜேம்ஸ் வண்டிக்குள் ஏறி, ஆலனின் கால்களுக்கு அருகில் இருந்த இடத்தில் சுருண்டு அமர்ந்துகொண்டான்.



அவர்கள் பண்ணை வீட்டின் ஜன்னல்களிலிருந்து வெளிப்பட்ட வெதுவெதுப்பான ஒளியைக் கடந்து சென்றனர்.

நிலவின் முன்னால் ஒரு மேகம் வந்து மறைத்தது.

குண்டும் குழியுமான அந்தச் சாலையில் இருள் அவர்களைச் சூழ்ந்துகொண்டது.

ஆலனும் ஹென்றியும் ஒரு வார்த்தைகூட பேசவில்லை.

அடிமைகளைத் தேடும் வேட்டைக்காரர்கள் அவர்களைப் பிடிக்க முயற்சிப்பார்களா?


தான் எவ்வளவு பயந்திருக்கிறேன் என்பதைப் பற்றி சிந்திக்காமல் இருக்க ஆலன் முயன்றான்.


ஹென்றி தன்னைச் சுட்டுவிட்டு, வயதான ஜாக்கைத் திருடிக்கொண்டு போனால் என்ன செய்வது?

ஆலன் கடிவாளத்தை இழுத்து, வயதான ஜாக்கை இன்னும் வேகமாகச் செல்லச் செய்தான்.

அவனுடைய கைகள் வியர்வையால் ஈரமாக இருந்தன.

அவன் தன் கீழ் உதட்டைக் கடித்துக்கொண்டான்.





“என்னுடன் இருப்பதற்கு உனக்குப் பயமாக இருக்கிறதா?” என்று ஹென்றி கேட்டான்.

ஆலனால் பதில் சொல்ல முடியவில்லை.

“இதோ, மாஸ்டர் ஆலன், நீ இந்தத் துப்பாக்கியை வைத்துக்கொள்,” என்று ஹென்றி சொன்னான்.

“யாராவது வருவது தெரிந்தால், உடனே அதைத் திருப்பிக் கொடு. நீ வண்டியை ஓட்டிக்கொண்டிருக்கும்போது நான் கீழே குதித்து ஓடிவிடுவேன்.உனக்கு எந்தத் தீங்கும் நேரக்கூடாது என்று நான் விரும்புகிறேன்.”

அவன் துப்பாக்கியை ஆலனிடம் கொடுத்தான்.

அந்தச் சிறுவன் தலையை அசைத்தான்.

அவனால் அந்தத் துப்பாக்கியைத் தொடக்கூட முடியவில்லை.

“நான் இனிமேல் ஒருபோதும் திரும்பிப் போக மாட்டேன்,” என்று ஹென்றி உறுதியாகச் சொன்னான்.

“அவர்கள் எல்லோரும் என்னைக் கொன்றாலும் பரவாயில்லை. ஆனால் நான் வாங்க வேண்டிய கடைசி சாட்டையடி முடிந்து போனது.”

பிறகு ஹென்றி, தான் அடிமையாக இருந்த காலத்தின் கதைகளை ஆலனிடம் சொல்லத் தொடங்கினான்.


கென்டக்கி மாநிலத்தின் வயல்களில், ஹென்றி பகல் முழுவதும் மட்டுமல்லாமல் பெரும்பாலான இரவுகளிலும் வேலை செய்திருந்தான்.

தன் சகோதரன் அடித்துக் கொல்லப்பட்டதை அவன் பார்த்திருந்தான்.

தன் சகோதரி வெகு தொலைவில் இருந்த வேறொரு உரிமையாளரிடம் விற்கப்பட்டிருந்தாள்.

இப்போது ஹென்றி கனடாவை அடைந்து சுதந்திரம் பெறுவதில் உறுதியாக இருந்தான்.

தான் ஹென்றியை நம்பாமல் இருந்ததற்காக ஆலனுக்கு வருத்தமாக இருந்தது.





திடீரென்று, இலைகளுக்கு இடையே ஏதோ ஒன்று வேகமாக நகரும் சத்தத்தை ஆலன் கேட்டான்.


அவனுடைய உடல் நடுங்கத் தொடங்கியது.

ஒரு நிழல் வண்டியின் முன்னால் வேகமாகக் கடந்தது.

வயதான ஜாக் தன் பின்னங்கால்களைத் தூக்கி நிமிர்ந்தது.

ஆலன் தன் விரல்கள் வலிக்கும் வரை கடிவாளத்தைப் பின்னால் இழுத்துப் பிடித்தான்.

மெதுவாக அந்தக் குதிரை அமைதியானது.



“என்ன நடந்தது, உனக்கு துப்பாக்கி வேண்டுமா?” என்று ஹென்றி கிசுகிசுத்தான்.

“வேண்டாம், அது சாலையைக் கடந்து சென்ற ஒரு வயதான முயல் மட்டும்தான்” என்று பதற்றமான சிரிப்புடன் ஆலன் சொன்னான்.“

ஹென்றி சிரிக்கவில்லை.





ஆலனும் ஹென்றியும் ஒன்றரை மணி நேரத்திற்கும் மேலாகப் பயணம் செய்தனர்.

ஒவ்வொரு நிழலும் ஒரு அடிமை வேட்டைக்காரனாக இருக்குமோ என்று ஆலன் கவலைப்பட்டான்.

அவனுக்கு தூக்கம் வரத் தொடங்கியது.

அவனுடைய முதுகு வலித்தது.

ஈரமான இரவின் குளிரால் அவன் நடுங்கினான். மேலும், தொடர்ந்து பயந்துகொண்டிருப்பதாலும் அவன் சோர்ந்து போயிருந்தான்.

இறுதியாக ஆலன் ஒரு ஒளியைக் கண்டான்.அது ஒரு இல்லத்திலிருந்து வந்தது — தாத்தா ஜேயின் இல்லம்.



ஆலன் வண்டியிலிருந்து குதித்து இறங்கி, ஹென்றியை கீழே இறங்க உதவினான்.

ஆலன் கதவைப் பலமாகத் தட்டினான்.

இரவு உடையுடன் இருந்த அவனுடைய தாத்தா கதவைத் திறந்து அவர்களை வரவேற்றார்.

தாத்தா ஜே ஆச்சரியப்பட்டவரைப் போலத் தெரிந்தாலும், என்ன செய்ய வேண்டும் என்பதை அவர் அறிந்திருந்தார்.

“சீக்கிரம் உள்ளே வாருங்கள், நீங்கள் இருவரும்,” என்று வயதான ஜே கூறினார்.


“ஆலன், உன் மாமா லெவியை எழுப்பு.”

ஆலன் அவர் சொன்னபடியே செய்தான்.

மாமா லெவி உடை அணிந்து, குதிரைகளைப் பூட்டுவதற்காக வெளியே சென்றார்.

தாத்தா ஹென்றிக்காக கொஞ்சம் உணவை ஒரு துணிப் பையில் கட்டி வைத்தார்.

ஹென்றி தாத்தா ஜேக்கு நன்றி கூறிவிட்டு, அவரைப் பின்தொடர்ந்து தொழுவ முற்றத்துக்குள் சென்றான்.



ஹென்றியும் லெவியும் புறப்படுவதற்கு முன்பு, ஆலன் தன் கையை ஹென்றியிடம் நீட்டினான்.

“நீங்கள் கனடாவுக்குப் பாதுகாப்பாகச் செல்ல வேண்டும்,” என்று ஆலன் தன்னால் முடிந்த அளவு தெளிவாகச் சொன்னான்.

அவனுடைய வார்த்தைகள் வலிமையாகவும் தெளிவாகவும் ஒலித்தன.

ஹென்றி ஜேம்ஸ் அந்தச் சிறுவனின் கையைப் பிடித்தான். “மாஸ்டர் ஜே, நான் உங்களை எப்போதும் நினைவில் வைத்திருப்பேன்,” என்று ஆலனின் கையை குலுக்கிக்கொண்டே சொன்னான்.

“நீ ஒரு துணிச்சலான சிறுவன்.”



பின்னுரை

முப்பது நிமிடங்களுக்குப் பிறகு, ஹென்றியும் லெவியும் ஓஹியோ மாநிலத்தின் மெர்சர் கவுண்டியில் இருந்த சுதந்திரமான ஆப்பிரிக்க அமெரிக்கர்களின் ஒரு பெரிய முகாமை அடைந்தனர். அந்தக் குடியிருப்பு, அடிமைகள் தப்பிச் செல்ல உதவிய அண்டர்கிரவுண்ட் ரெயில்ரோடு எனப்பட்ட ரகசியப் பாதையின் முக்கியமான நிறுத்தங்களில் ஒன்றாக இருந்தது. அந்த முகாமில் இருந்த ஒரு குடும்பம், வடக்குப் பயணம் செய்வது பாதுகாப்பாகும் வரை ஹென்றியை மறைத்து வைத்தது. சில மாதங்களுக்குள், ஹென்றி கனடாவை அடைந்துவிட்டான் என்ற செய்தியை ஜே குடும்பத்தினர் கேட்டறிந்தனர்.

ஆலன் வளர்ந்து, புகழ்பெற்ற குவேக்கர் மத போதகராகவும் ஆசிரியராகவும் ஆனார். அவர் ஒரு சிறந்த பேச்சாளராகவும் விளங்கினார். இது பலரையும் ஆச்சரியப்படுத்தியது. ஆலன் பிறந்தபோது, அவரது வாயின் மேல்பகுதியில் ஒரு துளை இருந்ததால், சில நேரங்களில் அவருடைய பேச்சை மற்றவர்கள் புரிந்துகொள்வது கடினமாக இருந்தது. ஆனால், அமைதி மற்றும் அன்பைப் பற்றிய அவரது வலிமையான வார்த்தைகள் பல குவேக்கர் நண்பர்களால் மதிக்கப்பட்டன. வயதான காலத்தில், ஆலன் தன் வாழ்க்கைக் கதையையும், தப்பியோடிய அடிமையைச் சந்தித்த நிகழ்வையும் “தி ஆட்டோபயோகிரஃபி ஆஃப் ஆலன் ஜே” என்ற தனது சுயசரிதை நூலில் எழுதினார்.

நிலத்தடி இரயில்பாதை உள்நாட்டுப் போருக்குப் பிறகும் செயல்பட்டுக்கொண்டிருந்தது. மாநிலங்களுக்கு இடையே நடந்த இந்தப் போர், அமெரிக்காவில் அடிமைத்தனத்திற்கு முடிவைக் கொண்டு வந்தது. அதற்குள், 60,000-க்கும் அதிகமான தப்பியோடிய அடிமைகள் இந்த ரகசியப் பாதையின் மூலம் சுதந்திரத்தை அடைந்திருந்தனர். அடிமைகளாக இருந்த நான்கு மில்லியன் மக்களின் எண்ணிக்கையுடன் ஒப்பிடும்போது, இந்த எண்ணிக்கை சிறியதாக இருந்தது. ஆனால், நிலத்தடி இரயில்பாதையின் வெற்றி, அடிமைத்தனத்தை ஆதரித்தவர்களுக்கு ஒரு பெரிய அடியாக அமைந்தது. இளம் ஆலன் ஜே மற்றும் அவரைப் போன்ற நிலத்தடி இரயில்பாதையின் உதவியாளர்கள், அமெரிக்க வரலாற்றில் மிகவும் கொடூரமான நடைமுறைகளில் ஒன்றான அடிமைத்தனத்தை முடிவுக்குக் கொண்டுவர உதவினர்.



